


**மகா அவதார் கிரியா பாபாஜி** : இவர் தமிழ் 18 சித்தர்கள் பரம்பரையைச் சேர்ந்தவர். போகநாதரிடமும், அகஸ்த்தியரிடமும் உபதேசம் பெற்று சொரூப சமாதி சித்தி பெற்றவர். தமிழ் சிவயோக சித்தாந்தத்தை தற்காலத்து இல்லறத்தார்களும் மிக மிக எளிய முறையில் கடைப்பிடிக்குமளவுக்கு ஐந்துவகை கிரியா யோக செயல்முறைகளாகத் திருத்தியமைத்து தொகுத்து வழங்கியவர். உலகெங்கிலும் உள்ள தமது நூற்றுக்கணக்கான கிரியா யோகத்தொண்டர்கள் மூலம் இந்த கிரியா யோகத்தை பரப்பி வளர்த்து வருபவர்.

**பேராசிரியர் டாக்டர் யோகி ராமையா** (1923-2006) செட்டிநாட்டு பிரபல நாட்டுக்கோட்டை ஏரோபிளேன் செட்டியாரின்



இளைய மகனார் சென்னை யுனிவர்சிட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற சிறந்த புத்திகூர்மை மிக்க நல்ல இளைஞர். தமது 22ஆவது வயதிலேயே கிரியா பாபாஜியால் ஆட் கொள்ளப்பட்டவர். 12 ஆண்டுகளுக்கு மேல் நேரடியாக பாபாஜியிடம் கிரியா யோகம் பயின்றவர். மும்பையில் முறையாக மருத்துவ கல்லூரியில் பிசியோதெரபி கவ்வியும் பெற்று தகுந்த அங்கீகாரத்துடன் அமெரிக்கா சென்றவர்.

ARIZONA (YUMA University) மாநிலத்தில் மருத்துவக் கல்லூரியில் யோகா பேராசிரியராக நியமிக்கப்பட்டவர். பாபாஜியின் வழிகாட்டுதலின்படி 16 வகையான உடல்நோய்களுக்குத் தக்கயோக மருத்துவ முறைகளை உருவாக்கி மாற்று மருத்துவதுறையில் ஒரு பெரும் புரட்சியை கண்டவர். உலகம் முழுவதும் 52 கிரியா யோக மையங்களை உருவாக்கி தினசரி 16 மணி நேரம் அயராது கடுமையாக இறுதி மூச்சுவரை உழைத்து பாபாஜியின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கடந்த ஜுலை 12,2006 தமது 82 ஆவது வயதில் பாபாஜியின் பாதவடிகளைச் சென்றடைந்துள்ளார்.

**யோகி ஸ்ரீராம் சுந்தர் :** ஸ்ரீலங்கா பிரபல தமிழ் பேராசிரியர் அமரர் ஸ்ரீநல்லதம்பி அவர்களின் 11குழந்தைகளுள் 5ஆவது மகனார். வயது 61. இவரது பூர்வீக நாமம் நல்லதம்பி சுந்தரலிங்கம். தமது தந்தையாரிடம் தமிழ் நூல்களை, குறிப்பாக சித்தர்கள் பாடல்கள், திருமுறைகள், திருக்குறள் முதலிய பல நூல்களைத் தெளிவாக கற்றவர். லண்டன் சென்று கல்லூரியில் மேற்படிப்பை கம்பியூட்டர் துறையில் பயின்றவர்.

கிரியா யோகம் மற்றும் சித்தர்பாடல்களின்பால் மிக அரிய நாட்டம்கொண்டு, தம்முடன் ஒத்த மனப்பான்மையுடைய மெலினி என்னும் ஐரோப்பிய நங்கை நல்லாளை மணந்தவர். போராசிரியர் யோகி ராமைய்யாவை தம் மனைவியுடன் சென்று சந்திக்கும் பாக்கியத்தை பெற்றார். கணவன், மனைவி, ஒன்றரை வயது குழந்தை சொக்கன் சகிதமாக தமிழகம் வந்து 10 ஆண்டுகளுக்குமேல் யோகியாரிடம் குருகுலவாசமாக உடன் தங்கியிருந்து பலவிதமான பணிவிடைகள் செய்தார். அவர் அன்பைப்பெற்று கிரியா யோகத்தை மிக மிக நுணுக்கமாகப் பயின்றார்.

யோகியாரிடம் இவ்வாறு நுணுக்கமான சீடராக உடனிருந்து உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஈந்து பணிவிடை செய்த ஒரு சில வெளிநாட்டவர்களில் (சுந்தரலிங்கம்) முதன்னைமயானவர். யோகியாரின் லண்டன் மாநகர் கிரியா யோக மையத்தை மிகத்திறம்பட நடத்தி, ஒரு யோக பாடசாலை மூலம், பல மருத்துவ வல்லுநர்கள் உட்பட, 500ற்கும் மேற்பட்ட லண்டன் வாழ் அன்பர்களுக்கு கிரியா யோக ஆசனம் கற்பித்தார். யோகி ராமைய்யா சமாதி ஆவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, அவரை நேரில் சந்தித்து, அடுத்த முறை இவர் லண்டன் வரும்போது, இவர்களில் 100 பேருக்காவது கிரியா உபதேசம் செய்து வைக்க ஒப்புக்கொள்ள வைத்தார். அதற்குள் பாபாஜி யோகியாரை தம்முடன் அழைத்துக்கொண்டு விட்டார்.

**ஸ்ரீராமச்சுந்தர் யோகியாராகும் தகுதி:** யோகியார் உயிருடன் இருந்தவரை கிரியா உபதேசம் செய்வதற்கு தம்மை தவிர



வேறு எவரையும் அனுமதித்தது கிடையாது.

சுந்தரலிங்கம் யோகியாரின் கெடுபிடியான சட்டதிட்டங்கள் எதையும் அணுவளவும் மீறவில்லை. இவர் குடும்பத்தில் தந்தையார் உட்பட 30ற்கும் மேற்பட்டவர்கள் கிரியா உபதேசம் பெற்றவர்கள். ஒருவர் 25 ஆண்டுகள் குருகுல வாச முறைப்படி வாழ்ந்து (8 மணி நேரம் யோகம் + 8 மணிநேரம் கர்மயோகம் + 8 மணிநேரம் தூக்கம்) என்று இடைவிடாமல் தொடர்ந்து கிரியா யோகம் பயின்று வந்தால், யோகியார் அனுமதியுடன் தனியாக உபதேசம் செய்யலாம் என்னும் ஒருவிதியை பதிவு செய்துள்ளார்.

இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது யோகியாருக்கு அடுத்தபடியாக பாபாஜியின் கிரியா யோகத்தை உபதேசம் செய்ய தகுதியுள்ளவர்கள் யோகியாரிடம் உபதேசம் பெற்ற 3000 சீடர்களில் 3 பேர் கூட தேறமாட்டார்கள். ஆனால் சீடர் சுந்தர லிங்கத்திற்கு இந்த விதிகள் சரியாக பொருந்துவதால் அவருக்கும் மட்டும் பூரணமான தகுதியுண்டு. லண்டனில் சுந்தரலிங்கம் மிகச்சிறப்பாக யோகாசனம் பயில்விப்பதைப் பார்த்து இவருடைய மருத்துவ மாணவர்கள், இவர் பாட்டனார் பெயர் ராமலிங்கம், இவரது பூர்வீக நாமம் சுந்தரலிங்கம் இரண்டையும் சேர்த்து, லண்டன் மாநகரில் ஒரு யோகிபோல் தாடி, மீசை ஜடாமுடியுடன் திரியும் இவருக்கு, (யோகி+ராம்+சுந்தர்) = யோகிராம்சுந்தர் என்று நாமகரணம் சூட்டி அழைக்க ஆரம்பித்துவிட்டனர். பின்னர் கருமாரிப்பட்டி சித்தர் (திருவண்ணாமலை அருகில்) அவர்கள் இவரை யோகி ஸ்ரீராம்சுந்தர்

என்று உலகம் முழுவதும் யானை மீது வருவாயாடா என ஆசீர்வதித்தார்.

யோகியாரின் மறைவிற்கு பிறகு கிரியா யோகம் பயில்விக்க எல்லாத்தகுதியும் கொண்ட யோகிராம்சுந்தர் யோகியாரைத் தொடர்ந்து கிரியா உபதேசம் கட்டாயம் செய்யவேண்டும் என்று மற்ற சீனியர் சாதகர்கள் வற்புறுத்தினார்கள். கருமாரப்பட்டி சித்தர் தவத்திரு வெள்ளையானந்த சுவாமிகள் தலைமை தாங்கி ஆசி கூற 1.11.2006 தேதி முதல் உபதேசம் செய்ய ஆரம்பித்தார். அன்று செய்தமுதல் சோலோ உபதேசமே மிகச்சிறப்பாக அமைந்துவிட மக்கள் சக்தி இயக்கம் தலைவர் டாக்டர். எம்.எஸ் உதயமூர்த்தி அவர்கள் சென்னையில் தம் திருவான்மியூர் அலுவகத்தில் வைத்து உபதேசம் செய்யும்படி கேட்டுகொண்டார்.

இதைத்தொடந்து கடந்த 2007 ஜீலை இறுதிவரை நடத்தப்பட்ட ஒன்பது மாதகால 18 உபதேசங்களில் ( தமிழ்நாடு + லண்டன் உட்பட) 600ற்கு மேற்பட்ட ஆன்மீக நேயர்களுக்கு கிரியா யோக பிராணயாம தியான தீட்சைகள் (ஒரு சூறாவளிப்பயணமாக தமிழகம் முழுவதும் சென்று) செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை உபதேசம் பெற்றவர்களுள் 70சதவீதம் சாதகர்கள் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது. வயதான பெரியவர்களுக்கு மட்டும் கிரியா உபதேசம் செய்வது என்பது ஒரு பெரிய தொட்டியில் புளியமரத்தை வளர்ப்பதற்கு ஒப்பாகும் என்றும் இறுதியில் அது என்ன நாலு புளியங்காய்கள் மட்டும்தான் காய்க்கும்? ஆனால் கல்லூரிகளில், பள்ளிகளில் பொதுக்கூட்டம்போட்டு அதில் 10,15 மாணவ, **மாணவிகள்** கலந்துகொள்ள ஊக்குவித்து, பெரியவர்களுடன் சேர்ந்து அவர்களில் குறைந்தபட்சம் 2,3 மாணவர்கள் உபதேசம் பெற்றால் கூட போதும். பாபாஜிக்கு தாம் செய்யும் இந்த சேவைகளுக்கு நல்ல பூரணமான பலன்களும் வாழையடி வாழையென தொடர்ச்சியான கிரியா யோக வளர்ச்சியும் கிட்டும் என்பது இவர் நம்பிக்கை. இதுவரை நடந்துள்ள 18 உபதேசங்கள் மூலம்



**கல்முனை கடற்கரையில் யோகி ராம் சுந்தர் ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்ய உறுப்பினர்களுடன் யோகாசன பயிற்சியில் ஈடுபடும் காட்சி.**

இவரின் கணிப்பு மிகவும் சரி என்றுதான் தோன்றுகிறது.

**குறிக்கோள்** : அடுத்து நவகோடி சித்தர்களுள் பெரும்பான்மையோர் பரந்த நம் தமிழகத்தின் பல்வேறு குன்றுகள்,

மலைகள் மற்றும் மலைச்சாரல்களில் உள்ள தம் குருநாதர் ஏகாந்தமான இடங்களில் வாசம் செய்துகொண்டு மிக அமைதியாக தவம் செய்துவருகின்றனர். அவை, திருவண்ணாமலை, தீர்த்தமலை, கொள்ளிமலை, கல்வராயன்மலை, கஞ்சமலை, பழனிமலை , சபரிமலை, பொதிகைமலை, சுந்தரமகாலிங்கமலை, கழுகுமலை, சுருளிமலை, விராலிமலை, மருதமலை, வெள்ளியங்கிரிமலை, மாதேஸ்வரன்மலை, சித்தூர்மலை, திருப்பதி ஏழுமலையான்மலை, திருத்தணிகை மலை, பர்வதமலை, பழமுதிர்சோலைமலை, திருமூர்த்திமலை, ஆனைமலை, ஏலகிரிமலை, பச்சைமலை, பவளமலை, நீலகிரிமலை, மகேந்திரகிரிமலை ஆகிய இடங்கள் என முன்னோர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த இடங்களுக்கு அருகாமையில் உள்ள நல்ல ஏகாந்தமான இடங்களில் கிரியாயோக ஆஸ்ரம மையங்களை அமைத்து உலகெங்கிலுமுள்ள நம் கிரியா யோக சாதகர்கள் தாமரை மலரை நாடி வெகு தொலைவிலிருந்து பறந்துவரும் வண்டுகள்போல் வந்து இங்கு தங்கியிருந்து கிரியா சாதனைகள் செய்ய வைப்பது ஆன்மீக தாகமுள்ள நம் அன்பர்களுக்கு செய்யும் நல்ல தொண்டாகும்.

பதினெண் சித்தர்களுள் கோரக்கர், நந்தித்தேவர், கொங்கணர், அகத்தியர் தவிர மற்ற பதினான்கு சித்தர்களும் தமிழகத்தில்தான் சொரூப சமாதி பெற்றனர். திருமறைக்காடு சித்தர்கள் பீடம், பரங்கிப்பேட்டை, வடலூர் வள்ளலார் சுவாமிகள், தபோவனம் ஞானானந்தகிரி சுவாமி போன்ற அண்மைக்காலத்து ஞானிகள் மேலும் 100க்கும் மேற்பட்ட மகான்கள் ஜீவ சமாதிபெற்ற பல ஸ்தலங்களையும் இணைத்துப்பார்த்தால் எதிர் காலத்தில் உலகத்திற்கு ஒளிகூட்டவல்ல மாபெரும் சித்த மகாபுருஷர்கள் தோன்றுவதற்கு தமிழக மண்தான் ஏற்ற சிறந்த ஆன்மீக மையமாகும் என்பது உள்ளங்கையில் உள்ள நெல்லிக்கனிபோல தெளிவாகும்.

மேற்குறிப்பிட்ட சித்தர்கள் இருப்பிடங்களில் இதுவரை வெகுசில இடங்களே கவர்செய்யப்பட்டுள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் அனைத்து இடங்களிலும் ஆஸ்ரமம் அமைக்கப்பட வேண்டும்.

**நம் பணிகள்** : எங்கெங்கெல்லாம் சித்தர்கள் வாசம் செய்யும் மையங்களுள்ளதோ அங்கெல்லாம் கிரியா ஆஸ்ரமம் அமைக்கப்படவேண்டும். அதைச்சுற்றியுள்ள ஆன்மீக ஆர்வமுள்ள பள்ளிக்குழந்தைகளை தேர்ந்தெடுத்து சித்தர் பாடல்களைப் பாராயணம் செய்யவைக்க வேண்டும். அவர்களுள் தகுதியானவர்களுக்கு கிரியா யோகம் பயில்விக்கவேண்டும். உலகெங்கிலுமுள்ள கிரியா சாதகர்கள் மூலம் Each one – Sponsor one’’ என்ற வகையில் 1000 சித்தமருத்துவர்களை உருவாக்கவேண்டும். Each one buy one acre of land என்னும் வகையில் 1000 ஏக்கர் நிலம் வாங்கி கையகப்படுத்தப்படவேண்டும். கிரியா பாபாஜியின் கனவாகிய சித்தா யுனிவர்சிட்டியை உலக அளவில் புகழ்கொண்ட மிக மிக நவீன வசதிகளுடன் கூடிய 10,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிக்பெரிய ஆராட்சிகூடமாக அமைக்கப்படவேண்டும்.

இந்த லட்சியத்துடன் உலகெங்கிலுமுள்ள, நம் ஓம் கிரியா பாபாஜி நம ஔம் என்று ஓதும் அனைத்து கிரியா சாதகர்களும் ஒன்றுபட்டுச்செயல்படவேண்டும். ஒரே தகப்பனுக்கு பிறந்த ஒரு தாயின் வயிற்று ஒன்பது பிள்ளைகளும் ஒரேமாதிரி இருப்பதில்லை. அதேபோல் கிரியா பாபாஜியிடம் உபதேசம்பெற்ற பல்வேறு யோகிகளும் ஒரேமாதிரி இருக்கவியலாது. அவரவர் ஆற்றல், அறிவு, ஞானம், புரிந்துகொள்ளும் சக்திக்கு ஏற்ப அவரவர்கள் போதிக்கும் கிரியா யோக போதனை முறைகளில் மாற்றங்கள் இருப்பது இயல்புதான்.

இதை உணர்ந்து நமக்குள் பேதம், குற்றம் , குறைகளைக் காணாமல் பல்வேறு வேற்றுமைகளிலும் ஒரு ஒற்றுமையைக் கண்டு பாபாஜியின் லட்சியத்தை நோக்கி நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவோம்!




**கல்முனை நால்வர் கோட்டம் - அன்பு ஆச்சிரமத்தில் ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்ய குரு ஆறுமுகம் ஐயாவுடன் யோகி ராம்சுந்தர் மற்றும் யோக ஆரண்ய உறுப்பினர்கள் மற்றும் கல்முனை கோட்டக் கல்லூரிப்பணிப்பாளர் திரு.பரதன் கச்தசாமி.**